Pamban-Rameswaram Link Road.

* 19. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the proposals for the Pamban-Rameswaram Link Road Project have been approved by the Central Government and

(*b*) if so, the details thereof?

பாம்பன்-இராமேஸ்வர இணைப்புச் சாலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பாம்பன்-இராமேஸ்வர இணைப்புச் சாலை திட்டத்திற்கான செயற் குறிப்புகளுக்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இப்பணிக்குரிய ரூ. 532.87 லட்சம் மதிப்பீட்டு பட்டியலுக்கு மத்திய அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. பாலம் அமைப்பதற்கு ரூபாய் 481.86 லட்சமும், இணைப்புச் சாலைப்பணிக்கு ரூ. 51.01 லட்சமும் மதிப்பிடப் பட்டிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த வேலை எப்போது துவங்கும், எப்போது முடிவடையும் என்று தெரிந்துகொள்ள முடியுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Government of India have recently in March 1972 accorded financial sanction and technical approval to the estimate for Rs. 532.87 lakhs for the above work. The cost of bridge alone works out to Rs. 481.86 lakhs and the cost of the approach road works out to Rs. 51.01 lakhs. The Chief Engineer, National Highways has reported that tenders on all-India basis will have to be called for for the work and that it will take 6 months to finalise and settle the tenders. After the settlement of tenders, it will take about 3 years to complete the work.

Overbridge in North Coimbatore.

* 20 *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct an overbridge in North Coimbatore as the railway gate is often closed and consequently traffic is blocked; and

(*b*) if so, the details thereof?

1972 ஆகஸ்டு 9]

வடகோயம்புத்தூர் மேம்பாலம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வடகோயம்புத்தூர் இரயில்வே கேட் அடிக்கடி அடைக்கப்பட்டு நெடுநேரம் போக்குவரத்து தடைப்படுவதால், அங்கு ஒரு மேம்பாலம் அமைத் திடுகிற செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை விரைவில் அமுல் படுத்துவதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மேம் பாலத்தைப் பொறுத்த வரையில், இது கோவை முனிசிபாலிடி எல்லைக்குள்ளே அமையப்படவேண்டியதாக இருக்கிறது. முனிசிபாலிடியைப் பொறுத்த வரையில், அதனுடைய பங்கைச் செலுத்தவேண்டும். இரயில்வே இலாகாவும் கோவை முனிசிபாலிடியும் பங்கிட்டுக் கொள்ளவேண்டிய இந்தச் செலவினங்கள் பொறுத்து நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறது. விரைவாக நிறைவேற்ற எல்லாச் செயல்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

Railway Overbridge at Subramaniapuram

* 21. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether, after the completion of the overbridge over the railway level crossing at Subramaniapuram, the present Tirupparankundram Road and the level crossing will be permanently closed; and

(b) if so, the reasons therefor?

சுப்பிரமணியபுரத்திலுள்ள இருப்புப்பாதை மேம்பாலம்

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுப்பிரமணியபுரத்திலுள்ள இருப்புப்பாதை சாலைக்கடவின் மேல் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகு தற்போதுள்ள திருப்பரங் குன்றம் சாலை, இருப்புப்பாதைக் கடவு ஆகியவை நிலையாக மூடப்படுமா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?